DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 27/2021 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| Name | : | **சேகர்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் BNSS சட்டப்பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 29.08.2024

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கிராம உதவியாளர் சங்கையாவை தெரியும். சாட்சிகள் பெரியணன், நெருதி மற்றும் காயம்பட்ட சாட்சி சங்கையா , பொன்னுபிள்ளை, கருப்பச்சாமி , தேவந்திரன் ஆகியோர்களை தெரியும். நானும் கிராம உதவியாளர் சங்கையாவும் கிளாதிரி குருப் கிராமத்தில் பயிர் சாகுபடி கணக்கு எடுத்துக்கொண்டிருந்தோம். அன்றையதினம் 14.06.2019 ம் தேதி பெயரியணன் என்பவர் எனக்கு போன்செய்து அவருக்கு பக்கத்துவீடான வெள்ளைச்சாமி மகன் சங்கையா வீட்டில் வெடிச்சத்தம் கேட்தாக சொன்னார். அதன் பேரில் 45.00 நிமிடத்தில் நானும் கிராம உதவியாளர் சங்கையாவும் சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கு இருந்தவர்கள் 108 ஆம்புலன் மூலம் வெடிவிபத்தில் இடது முழங்காலில் காயம் பட்ட வெள்ளைசாமி மகன் சங்கையாவை என்பவரை மேலூர் அரசு

மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாக தகவல் சொன்னார். அதன்பேரில் நான் மேற்படி தகவலை நான் எனதுஉயர் அதிகாரிகளுக்கு சொன்னேன். மேலும் காயம் பட்ட சங்கையா அவரது வீட்டு முன்பு மணல்இருந்ததாகவும் அந்த மணலில் நடந்து வரும்போது அதனுள் இருந்த வெடி பொருள் வெடித்தால் விபத்து ஏற்பட்டதாகவும் சொன்னரர். வெடி விபத்திற்கு யார் காரணம் என்றால் அது பற்றி எதுவும் தெரியாது. அதன் பிறகு எனது உயர் அதிகாரிகள் அறிவுறுத்தின் பேரில் பூவந்தி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். **அந்த புகார் மனு அ.சா. ஆ.1** ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில்குறுக்குவிசாரணை**

நான் கொடுத்த புகாரில் பயிர்சாகுபடிக்காக பணியில் இருந்தாக சொல்லவில்லை என்றால் சரிதான். பெரியணன் போன்மூலமாக தகவல் சொன்னார் என்ற விபரத்தை புகரரில் சொல்லவில்லை என்றால்சரிதான். சம்பவ இடத்திற்கு நான் எப்போது சென்றேன் என்ற விபரத்தையும் புகார் மனுவில் நான் சொல்லவில்லை என்றால்சரிதான். சம்பவ நடைபெற்ற இடம் எந்த புல எண் மற்றும் அதன் வரைபடத்தை போலிசாரிடம் சொல்வில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவஇடத்திற்கு செல்வில்லை என்றாலும் போலிசார் கேட்க்கொண்டதன் பேரில் காவல்நிலையம் சென்று போலிசார் அறிவுறுத்தலின் பேரில் புகார் எழுதிக்கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் புகாரில் சொல்வது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால்சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

A PASUMPON SHANMUGAIAH

Digitally signed by A PASUMPON SHANMUGAIAH
Date: 2024.08.29 20:24:35 +0530

**Chief Judicial Magistrate**

**Sivagangai**